**செய்தி வெளியீடு எண்: 492** **நாள் : 09.10.2015**

**செய்தி வெளியீடு**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் **அக்டோபர் 2015** மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 10 .10.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | தி இந்து தியாலஜிக்கல் மேல்நிலைப்பள்ளி, 375, தங்கசாலை தெரு, சௌகார்பேட்டை, சென்னை–600 079. (சௌகார்பேட்டை தபால் நிலையம் எதிரில், மகாசக்தி ஹோட்டல் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண்.1, ஏஏ, திட்ட சாலை, எம்.பி.டி.காலனி, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை – 600 081. |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி , 12, கபிலர் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011. (தான்பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி, 104–வது கோட்ட அலுவலகம், லெட்டாங்ஸ் ரோடு, வேப்பேரி, சென்னை – 600 007. (சிஎஸ்ஐ ஈவார்ட்ஸ் மேனிலைப்பள்ளி அருகில்) |
| 5 | அம்பத்தூர் | ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி, நீலகண்ட முதலி தெரு, வானகரம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை – 600 095. (வானகரம் பஸ் நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை – 600 049. (சிட்கோ நகர் வாட்டா டேங்க் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | தூயபவுல் மகாஜன மேல்நிலைப்பள்ளி, சாத்தாங்காடு நெடுஞ்சாலை, காலடிபேட்டை, சென்னை – 600 019. (ராஜாகடை) |
| 8 | ஆவடி | ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, கிராண்ட் லைன், புழல் ஒன்றியம், மாதவரம் நெடுஞ்சாலை, சென்னை – 600 052. (பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் எதிரில்) |
| 9 | தி.நகர் | அம்பத்தூர் அரிமா சங்க நடுநிலைப்பள்ளி, பி.வி.இராஜமன்னார் சாலை, விஜயராகவபுரம், சாலிகிராமம், சென்னை – 600 093. (சிவன் பார்க் பின்புறம்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண்.10, சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை – 600 028. (மந்தவெளி இரயில் நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, நெல்லிப்பேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை, சென்னை– 600 044. (படவேட்டம்மன் கோயில் அருகில்) |
| 12 | தாம்பரம் | தி மெட்ராஸ் சேவாசதன் மேல்நிலைப்பள்ளி, காந்திரோடு, மேற்கு தாம்பரம், சென்னை – 600 045. (நேஷனல் தியேட்டர் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | வித்யாசாகர் சகோதரத்துவ நடுநிலைப்பள்ளி, எண்.36/48, சேஷாச்சலம் தெரு, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. (சைதாப்பேட்டை இரயில் நிலையம் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, மாடல் பள்ளி சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை – 600 006. (அப்போலோ குழந்தைகள் மருத்துவமனை அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, வீரப்பெருமாள் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை – 600 004. (விவேகானந்தா கல்லூரி எதிரில்) |
| 16 | சோழங்கநல்லூர் | சமுதாய நலக்கூடம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, செம்மஞ்சேரி, சென்னை – 600 119. (அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில்) |

முதன்மை செயலாளர்/
ஆணையாளர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**